[3rd March 1959

Upper Periyar Scheme

* 524 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மேல் பெரியாறு திட்டம் சம்பந்தமாக கேரள சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா ?

(ஆ) அந்தத் திட்டம் நிறைவேறினால் எத்தனை ஏகராக்களுக்கு தண்ணீர் பாய்ச்சலாம் ?

(இ) எவ்வளவு ரூபாய் செலவு ஆகும் ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) About 160,000 acres.

(*c*) Rs. 11 crores approximately.

Sri N. R. THIAGARAJAN: மேல் பெரியாறு திட்டம், பரம்பிக்குளம் திட்டம் போன்று ஒரு முக்கியமான திட்டம் நிதி மந்திரி அவர்கள் பட்ஜெட் பிரசங்கத்தில் இதுபற்றி மறைமுகமாக குறிப்பிட்டிருந்தார். அதை சீக்கிரம் பரிசீலனை செய்வதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

The Hon. Sri P. KAKKAN : இதுபற்றி கேரள சர்க்காருடன் கலந்துபேசி சீக்கிரம் எடுத்துக்கொள்ளுவதற்கு ஸோனல் கவுன்சிலில் முடிவு செய்யப் படும்.

Mr. SPEAKER : கேள்விகள் 525, 526 இரண்டையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

Women's Education

* 525 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம் நியமித்தப் பெண் கல்வி தேசீய கவுன்சிலின் சிபாரிசின்படி இம்மா நிலத்தின் ராஜ்ய கவுன்சில் நியமனம் செய்தாகிவிட்டதா? அதன் விபரமென்ன ?

(ஆ) இல்லையானால் எப்போது நியமிக்கப்படும் ? எந்த அடிப்படையில் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Report of the National Committee on Women's Education has not yet been received by the State Government. Necessary action will be taken on the recommendations of the Committee on receipt of the Report.

* 526 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பெண் கல்வி அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கும் எழுபது லட்சம் ரூபாயில் இம்மாநிலத்தின் வீதம் எவ்வளவு ?

(ஆ) இவ்வுதவி மூலம் இம்மாநிலத்தில் பெண் கல்வி அபிவிருத்திக்காகச் செய்யப்போகும் அபிவிருத்தி வேலைகள் என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Rs. 4·94 lakhs which works out to 7·5 per cent of the total provision.

(*b*) Orders have been issued for the construction of 126 quarters (twin Units) for women teachers in District Board Elementary Schools working in rural areas in the State.